**வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் - 2013**

வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் வனவிலங்குகள் மற்றும் விருட்சங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (469 அதிகாரம்) 71(2) (ஏ) பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட வனஜீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 11(அ) இலக்க பிரமாணம் மற்றும் 2009 இன் 22 ஆம் இலக்க வனஜீவராசிகள் வனவிலங்குகள் மற்றும் விருட்சங்கள் பாதுகாப்புக் (திருத்திய) கட்டளைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்றவகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகள் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனஜீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,074,196 ஆன அட்டுறு செலவினம் மற்றும் ஒப்பந்தக் கொடுப்பனவு அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 7,231,993 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்புக்கள் மெய்மையாய்வின் பிரகாரம் யானை வெடி இருப்புக்களில் ரூபா 760,835 தொகையான பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. இருப்பு பற்றாக்குறை, புத்தகங்களில் சீராக்கப்பட்டு பௌதீக இருப்பினை நிதி அறிக்கைகளில் சுட்டிக்காண்பிப்பதற்குப் பதிலாக இருப்புப் புத்தகத்தின் மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் இருப்பு பெறுமதி ரூபா 760,835 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | பால்மா இருப்புக்கள் | 2,304,528 | பௌதீக பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | மருந்து இருப்புக்கள் | 2,860,000 | - மேற்படி - |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

செலுத்த வேண்டிய மிகையூதிய படிகள் ரூபா 30,686,737 தொகையும் செலுத்த வேண்டிய சேவைக்கட்டணம் ரூபா 4,669,111 தொகையும் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| i. நிதிப் பிரமாணம் 454 | களஞ்சியத்திற்கு கிடைக்கப்பெறும் சகல பொருட்களையும் இருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 09 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,773,894 ஆன 45 வகையான மருந்துகள் இருப்பு பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| ii. நிதிப் பிரமாணம் 755 | களஞ்சியத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெறும் சந்தர்ப்பத்தில் அடுத்த உத்தியோகத்தருக்கு பொருட்களை ஒப்படைக்கும் போது புத்தகங்களை இணக்கம் செய்து பொருட்கள் தொடர்பான அறிக்கையொன்று தயாரித்து பற்றாக்குறைகள் வேறாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்காய்விற்கும் அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் ரூபா 530.4 மில்லியன் மிகையாக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 442.2 மில்லியனாக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 88.2 மில்லியனான அதிகரிப்பு காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது பூங்கா நுழைவுக் கட்டணம் ரூபா 152.15 மில்லியனால் அதிகரித்தமையே இதற்கான பிரதான காரணமாக இருந்தது.

**3.2 பகுப்பாய்வுடனான நிதி மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் 2012 ஆம் ஆண்டினது வருமானம் ரூபா 733.4 மில்லியனாக இருந்ததுடன், அது மீளாய்வாண்டில் ரூபா 942.4 மில்லியன் வரை ரூபா 209 மில்லியன் அல்லது 28.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2012 ஆம் ஆண்டின் செலவினம் ரூபா 291.17 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அது ரூபா 412.01 மில்லியன் வரை ரூபா 120.84 மில்லியனால் அல்லது 41.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) விடயங்களின் பிரகாரம் பகுப்பாய்வு செய்த போது மீளாய்வாண்டில் சுற்றுலா விடுதிகள், தேசத்திற்கு மகுடம், சிவில் பாதுகாப்பு படிகள் மற்றும் பூங்காக்களில் சுற்றுலா பயணிகளினதும் மிருகங்களினதும் வசதிகளை அதிகரிப்பதற்காக செலவிடப்பட்ட செலவினம் 100 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், மருத்துவ வழங்கல் செலவினம் 12.318 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இவ்வாறான அதிகரிப்பிற்கு தாக்கமளிக்கும் காரணங்களை உறுதிப்படுத்துவதற்காக தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 நிறுவனத்திற்கெதிராக அல்லது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ நடவடிக்கைகள்

மீளாய்வாண்டின் போது வெளிநிறுவனங்கள் மற்றும் நபர்களால் திணைக்களத்திற்கு எதிராக நீதிமன்றமொன்றில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தால் வெளி நபர்களுக்குகெதிராக 661 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது ரூபா 21 மில்லியன் வெளித்தரப்பினருக்கு எதிராக தொடர்ந்த வழக்குகளிலிருந்து தண்டப்பணமாக அறவிடப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

2008 – 2013 ஆகிய 06 ஆண்டுகளில் யானை வெடிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 203.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 47.3 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்டிருந்தது.

(i) யானை வெடிகளை கொள்வனவு செய்வதற்குரிய தொழில்நுட்ப விதப்புரைகளோ அல்லது யானை வெடிகளுக்கு இருக்க வேண்டிய தரங்களோ தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) யானை வெடியொன்றின் ஒலி எத்தனை டெசிபல் வீச்சில் இருக்க வேண்டுமென தெளிவாக நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் தேவையான டெசிபல் அளவு உள்ளவாறாக இருக்கின்றதா என பரீட்சித்து யானை வெடிகளின் குணநலத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சிறிய யானை வெடிகளை வெடிக்க வைக்கும் போது குறைபாடுகள் காணப்படுவதாக 2013 ஒக்தோபர் 25 ஆம் திகதி பொலன்னறுவை உதவிப் பணிப்பாளரால் யானை வெடிகளுக்கான விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதில் வெடிக்காத யானை வெடிகள் தொடர்பாகவும் வெளிக்களத்தில் வெடிக்காத யானை வெடிகள் தொடர்பாகவும் உதவிப் பணிப்பாளர் அலுவலகங்களிலிருந்து அறிக்கைகளைப் பெற்று எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக தகவல்கள் சேகரித்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(iv) 2006 இன் அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.12.1 (ஊ) பிரிவிற்கு முரணாக பட்டாசு மற்றும் வானவெடி கைத்தொழில் உற்பத்தியாளர்களிடமிருந்து இந்த யானை வெடி வழங்கலுக்காக இரண்டு வருட அனுபவமொன்று கோரப்பட்டிருந்தமை காரணமாக நீண்டகாலமாக ஒரே உற்பத்தியாளருக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது.

**4.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காட்டு மிருகங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் நிதியத்தின் பிரதான செயற்பாடாக இருந்ததுடன், அதிலிருந்து இடம்பெயர்ந்த யானைக் குட்டிகள் பராமரிப்பது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 02 வாரங்கள் முதல் 05 ஆண்டுகள் வரையான யானைக் குட்டிகளுக்காக செயற்கை பால் வழங்கும் போது வயது, சுகாதார நிலைமை, வழங்க வேண்டிய அளவு போன்றவற்றைக் கருத்திற் கொண்டு உரிய முறைமையொன்று நிறுவகத்தினுள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. யானைக் குட்டிகளுக்கு தேவையான பால் கட்டளை இடுவது தொடர்பாக முறைமையான நடைமுறையொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், மீளாய்வாண்டில் பால் கொள்வனவிற்காக ரூபா 31 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 14.2 மில்லியன் அளவிலான தொகை மருந்துகளுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், கால்நடை வைத்திய நிலையங்களுக்கு மருந்துகளை வழங்கும் போது முன்னர் விநியோகிக்கப்பட்ட மருந்துகளின் பயன்பாடு, மருந்துகள் வழங்கப்பட்ட கால்நடை தொடர்பான வரலாற்று பதிவுகள், முன்னர் வழங்கப்பட்ட மருந்துகள் கிடைத்தமையை உறுதிப்படுத்துவது தொடர்பான அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஏப்ரல் 01 ஆம் திகதி நிலையப் பரிசோதனையின் பிரகாரம் பூங்காக்களுக்கு உட்செல்வதற்காக நுழைவுச் சீட்டுக்கள் வழங்குதலை முறைப்படுத்துவதற்காக கணணி நுழைவுச்சீட்டுக்கள் வழங்கும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அக்கணனி முறைமையை செயலற்றதாக்கி நுழைவுச்சீட்டுக்களுக்குப் பதிலாக பொது 172 பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு பணம் சேகரிக்கப்பட்டிருந்தன. இதனால் பணத்தை சேகரிக்கும் போது மோசடிகள் இடம்பெறக்கூடிய இடர் ஆகக்கூடிய மட்டத்தில் காணப்பட்டன. எடுத்துக்காட்டாக பல வாகனங்களில் ஒரு குழு வருகை தரும் போது சகல வாகனங்களுக்கும் ஒரு பற்றுச்சீட்டும் ஒரு அனுமதிப்பத்திரமும் எழுதப்படுகின்றது. அது ஒரு வாகனத்திற்கு மாத்திரம் வழங்கப்படுவதுடன், ஏனைய வாகனங்களுக்கு எந்தவொரு அனுமதிப்பத்திரமொன்றும் வழங்கப்படுவதில்லை. ஆதலால் பூங்காவில் பிரிந்து செல்லும் வாகனங்களைப் பரீட்சித்துப் பார்த்து அவ்வாகனங்களுக்கு கட்டணங்கள் அறவிடப்பட்டதா என பாதுகாப்பு நுழைவாயிலில் பரிசோதிக்க முடியாதிருந்தன. அத்தோடு சரணாலயங்களை பார்த்துவிட்டு வெளியேறும் வாகனங்களைப் பரிசோதித்து அவர்களின் நுழைவுச்சீட்டுக்கள் (பொது 172) மீண்டும் சேரிக்கப்படாமையால் அத்தினத்திலேயே மீண்டும் மீண்டும் அந் நுழைவுச்சீட்டுக்கள் பயன்படுத்துவதற்கான வழிகள் தடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

வீவில சுற்றுலா விடுதி ரூபா 11,730,808 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 செப்தம்பர் வரையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

நிதியத்தினால் செயற்படுத்தப்பட்ட ஹீன்வெவ சுற்றுலா விடுதி நிர்மாணம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்மாணத்திற்காக ரூபா 1,081,295 இற்கு செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.7 பிரிவின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட உழைப்புக் கிரயம், பொருள் மற்றும் தொழில் மேந்தலைக் கிரயம் என்பவற்றை குறிப்பாக இனங்காணாமல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உழைப்பிற்காக கொடுப்பனவு செய்யும் போது போலியான பெயர்கள் பயன்படுத்தப்பட்டு ரூபா 83,600 தொகை செலுத்தப்பட்டிருந்தமையும் செய்யப்பட்ட வேலை தொடர்பாக குறிப்பிடாமல் ரூபா 101,200 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. 09 தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக முழுக்காலப்பகுதியிலும் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமைக்காக ரூபா 247,950 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதனைக் கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாத அசாதாரண நிலைமையொன்றாக இருந்தது.

(இ) பொருட் கொள்வனவிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 72,000 தொகைக்குரிய பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் காணப்பட்டதுடன் மரப் பாதுகாப்பு, உள்ளேயும் வெளியேயும் பூசப்பட்ட பூச்சுக்களின் கிரயம், மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட வேலைக்காக பயன்படுத்த வேண்டிய நியம அளவினை விஞ்சிய அசாதாரண அளவொன்று ரூபா 212,245 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நிர்மாணங்களுக்குரிய பௌதீக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், கொடுப்பனவு செய்யும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

# 5 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயற்பாட்டுத் திட்டம்

2013 ஆம் ஆண்டிற்காக செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டில் ரூபா 202,656,025 இற்கு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடவளவையில் உள்ள எத்அதுறு செவனவில் ரூபா 58,000 பெறுமதியான 16 புத்தகங்கள் தொலைந்து போனமை தொடர்பாகப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) அடியிதழ் சேர் புத்தகங்கள் தொடர்பான நலிவுற்ற உள்ளகக் கட்டுப்பாட்டை பலப்படுத்துவது தொடர்பாக முகாமைத்துவம் நடைமுறைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) மன்னார் பதவியணியினர் உத்தியோகபூர்வ விடுதி, வனப் பாதுகாப்பு அலுவலகம் மற்றும் தொழிலாளர் உத்தியோகபூர்வ விடுதி என்பவற்றின் நிர்மாணத்திற்காக ரூபா 8,630,360 பெறுமதிக்கு 2011 ம் ஆண்டின் போது உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் வேலையை பூர்த்தி செய்வது என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையில் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 1,933,200 தொகை ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையில் செயற்திட்டத்தின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வன விலங்குப் பூங்கா வருமானம்
(இ) தண்டப் பணச் சேகரிப்பும் மிகையூதியக் கொடுப்பனவும்
(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்
(உ) ஆவணங்களைப் பேணுதல்
(ஊ) ஒப்பந்த நிர்வாகம்
(எ) இருப்புக் கட்டுப்பாடு